**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-36**

| | |
|---|---|
| Name | திரு.மோகன் |
| Father Name | பெருமாள் |
| Village /Area | கீரம்பாடி |
| Taluk | ஆற்காடு |
| Occupation | V.A.O. Rtd. |
| Age | 68 |
| Religion | இந்து |
| Aadhar Card No. | 4081 6971 3657 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 27.11.2025.

**4, 5, 6, 8,9, 12, 15 எதிரிகள் ஆஜர். 3, 7, 10, 11, 13, 14 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச. பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் ஆற்காடு வட்டம், கரிக்கந்தாங்கல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து 2015ம் ஆண்டு மே மாதம் பணி ஓய்வு பெற்று, தற்போது ஆற்காடு வட்டம் கீராம்பாடி கிராமத்தில் வசிக்கிறேன். 2012ம் ஆண்டு வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் கரிக்கந்தாங்கல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அப்போது கூடுதல் பொறுப்பாக கீராம்பாடி கிராமம், குக்குண்டி கிராமம் ஆகிய கிராமங்களுக்கு கூடுதல் பொறுப்பு வகித்தேன். வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னிடம் குக்குண்டி கிராம ஆட்கள் 4 பேரை அழைத்துவருமாறு சொன்னார். நான் என்னுடைய கிராம உதவியாளர் ராஜேஷ் மூலம் அந்த 4 ஆட்களை அழைத்து வந்தேன். அந்த 4 நபர்களிடம் வேலூர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் கையெழுத்து பெற்றார். அதற்கு சாட்சியாக நானும் கையெழுத்து போட்டேன். அ.சா.ஆ.4, 5, 8, 10 ஆகியவைகளில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடைய கையெழுத்துக்கள் தான். மேலும், டி.சுந்தரராஜன் என்பவரின் மாதிரி கையெழுத்துகள் உள்ள ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ.22** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னிடம் 4 நபர்களின் பெயர்களை வாய்மொழியாக சொல்லி அழைத்து வரச்சொன்னார், அவர்களை நான் அன்றே குக்குண்டி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு அழைத்து வந்தேன். என்னுடைய கிராம நிர்வாக அலுவலகத்தில் அந்த 4 நபர்கள் கையெழுத்து போட்ட பிறகு நான் கையெழுத்து போட்டேன். எத்தனை பேப்பர்களின் கையெழுத்து போட்டேன் என்று எனக்கு நினைவில்லை. சுமார் 10 பேப்பர்களில் கையெழுத்து போட்டு இருப்பேனா என்றால், எத்தனை பேப்பர்களில் கையெழுத்து போட்டேன் என்று எனக்கு நினைவில்லை. நான் கையெழுத்து போட்ட பேப்பர்களில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு நினைவில்லை என்றால், சரிதான். நான் வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் கேட்டதன் பேரில் நான் கையெழுத்து போட்டேன் என்றால், வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் கேட்டதால் நான் ஆட்களை அழைத்து வந்து கையெழுத்து

போட்டேன். வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் கேட்டதன் பேரில் கையெழுத்து போட்டேன் என்றால், சரிதான். நான் 2011ம் ஆண்டு அந்த கிராமத்தில் பணியில் சேர்ந்ததால் 2012ம் ஆண்டு வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் கையெழுத்து வாங்கியதாக நான் சரியாக சொல்கிறேன். என் முன்பு சாட்சிகள் யாரும் கையெழுத்து போடவில்லை என்றால், சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet